892



# " சித்தன் "

ஓர் மாதாந்தப் பத்திரிகை.


| | | |
|---|---|---|
| மாலை 1. | ஜூன் 35. | மணி 6. |
| Vol. 1. | June. 35. | No. 6. |


உள்ளுரை.


| | | பக்கம். |
|---|---|---|
| 1. | கடவுள் வழிபாடு ... ... | 169 |
| 2. | வாழ்த்துப்பா ... ... | 170 |
| 3. | குழந்தை வளர்த்தல் ... ... | 171 |
| 4. | செய்யுள்ப் பகுதி ... ... | 175 |
| 5. | மாம்பழக்கவிச்சிங்க நாவலரவர்கள் | 177 |
| 6 | தேன் ஆறு ... .... | 182 |
| 7. | நூதன அநுபவ அலங்கார ரத்னம் | 184 |
| 8. | ரஷ்யாவில் ஸ்திரீகள் நிலைமை ... | 187 |
| 9. | வேண்டாம் விதவைகள் துயர் | 190 |
| 10. | குணவாகடம் .... ... | 192 |
| 11 | ...க்கிபேதி ... ... | 196 |
| | ...செய்பகுதி ... ... | 199 |
| | ...தி ... ... | 200 |
| | ... ... | 201 |
| | ... ... | 204 |


ஆசிரியர் C. P. சாமி.

11 AUG 1935 MADRAS

# "சித்தன்"

## பழனி.

---

"எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன்"


### மாதாந்தப் பத்திரிகை.

ஆசிரியர்— C. P. சாமி.

| மாலை 1. | ஜூன் . 1935 | மணி 6. |
|---|---|---|


"அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்தல் அரிது." (குறள்)

பொருளாகக் கண்டபொரு ளெவைக்குமுதற் பொருளாகிப்
போத மாகித்

தெருளாகிக் கருதுமன்பர் மிடிதீரப் பருகவந்த
செழுந்தே னாகி

யருளானோர்க் ககம்புறமென் றுன்னாத பூரணவா
னந்த மாகி

யிருடீர விளங்குபொரு ளியாதந்தப் பொருளினையா
மிறைஞ்சி நிற்பாம்.

(தாயுமானவர்.)

---

# "சித்தன்" வாழ்த்து.

(S. சிவனையா, ஆசிரியர். ஜவ்வாது பட்டி.)

சென்னை 600 038

ஆசிரியப்பா.

கழனிசூழ் மாபெருங் கமுகொடு பலாவும்
வளமிகு வாழையும் வாளை தென்னையோ
டழகுற் றிலங்கும் அணிசேர் நன்னகர்ப்
பழனிப் பதியின் பாவலர் மனமகிழ்
பொன்னுச் சாமியாம் புனிதமாம் சிந்த
வைத்தியப் பெரியோன்! மாநல மிக்கோன்!!
சித்தனும் புதினத் திங்கள் வெளியீ டு
டுற்றதோ ராங்கிலம் ஒவ்வொரு திங்களும்
பெற்றிடுந் தேதி பத்தினில் வெளிவந்
தத்தனின் அருளான் அவனியி லுலவி
வைத்தியம் உழவு வளமார் கைத்தொழில்
வாணிபம் கல்வி வையகத் தோர்க்கு
ஒத்த முறையில் உண்மையை விளக்க
உற்றதோர் காலத் துதவினன் அன்பால்
நாட்டுக் குடைய நலனெலாஞ் செறிந்து
வாட்டம தின்றி வளர்தொண் டாற்றி
எந்நாட் டவரும் நின்நாட்ட மதாய்ப்
போற்றியே வாழ்த்தப் புனிதப் பெயருள
சித்த!! நீயும் தீர்க்க தரிசியாய்
வாழ்க வாழ்க வாழிய
வாழ்க நன்னலம்! வாழ்கநல் வாழியே!!



# குழந்தை வளர்த்தல்.

குழந்தைகளின் பாதுகாப்புவிஷயமாக நம் நாட்டவர் அதிக கவலை எடுத்துக்கொள்கிறதில்லை. இதர நாடுகளில் இது சம்பந்தமாக பெற்றோர்கள் மாத்திரமல்ல அரசாங்கத்தாரும் கவனம் செலுத்துவதாக அறிகிறோம். தற்காலக் குழந்தைகளே பிற்காலக்குடிகளாக, அரசாங்க நிர்வாகிகளாக வருபவர்களாதலால் அவர்களை அறிவிலும் சரீர பலத்திலும் மேன்பட்டவர்களாக்குவது மேற்சொன்னவர்களின் கடமையேயாகும். இவர்கள் இளமையில் கற்கும் வித்தைக்கு அனுகுணமாகவே இவர்கள் பெரியவர்களாகும்போது தேச நிலைமையுமிருக்கும். ஆகையால் அந்தந்த தேசத்தின் உயர்வு தாழ்வுகள் இவ்விளைஞர்தம் கையிலுள்ளனவாகவே எண்ணவேண்டுமேயல்லாது வேறல்ல. இப்போது வித்தை கற்கும் சிறுவர்கள் இனி தேசகாரியங்களை எல்லா விதத்திலும் நிர்வகிக்கத் தகுந்தவர்களாகையால் அவர்கள் சன்மார்க்க சீலர்களாய் வாழத்தக்க கல்வியே போதிக்கப்படவேண்டும். அல்லாமலும் வளப்பமற்ற நிலத்தில் எவ்வாறு நிரம்பிய விளைவை எதிர்பார்க்கமுடியாதோ அதுபோல உடல்நலம் குன்றிய சிறுவர்மாட்டு கல்வியறிவைப் புகட்டுதல் இயலாத காரியம். ஆதலால் உடல் நலம் குன்றுவண்ணம் சுகாதார விதிகளை அவர்களுக்கு ஆரம்பத்திலேயே கற்பித்தலும் அத்தியாவசியம்.

ஒரு தேசம் அரசியலிலும், வியாபாரத்திலும், விவசா[illegible]லும், மற்ற பல்வேறு துறைகளிலும் முன்னேறவேண்

மொயின் அத்தேசத்தின் வாலிபர்களால்தான் ஆகவேண்டி இருக்கிறது. இவர்கள் பால்யப்பருவத்தில் அதாவது குழவிப்பருவத்தில் நல்லாசிரியர்பால் ஒப்புவிக்கப்பட்டு நற்போதனையும் பாதுகாப்பும் இருந்தாலொழிய அவர்கள் எங்ஙனம் நாட்டின் முன்னேற்றங்கருதும் சிறுவர்களாவார்கள்? ஆதலால் குழந்தைப்பருவத்தில் அவர்களைச்செவ்வனே பரிபாலிப்பது மிகவும் அவசியமாகும். இரும்பு நரம்புகளும், எஃகு தசைகளும், தளர்வுறா மனமுந்தான் ஒரு காரியத்தைச் சாதிக்குமேயல்லாது, உடைந்துபோன உடலும், அவிழ்ந்துபோன நரம்பும், அல்லற்பட்ட மனமும் ஒன்றும் செய்ய இயலாது. இத்தகைய இளைஞரின் தியாகத்தை அனுபவிக்கவேண்டுமென்றால் அவ்விளைஞர் கருத்தரித்ததினின்று வாலிபம் அடையும் வரையில் தகுந்த முறையில் பாதுகாத்துவரவேண்டுமன்றோ!

உலகில் உன்னத பதவிக்கு வந்துளோர் பலரைக்கவனித்தால் இளமையில் தம் பெற்றோரிடம் கற்றறிந்த வீரக் கதைகளால்தான் என்றறியலாம். நெப்போலியன் என்பவர் தன் படையோடு ஆல்ப்ஸ் மலையைக்கடக்க நேர்ந்தபோது படைவீரர் இம்மலையைக்கடப்பது கூடாதகாரியம் என்று சொல்ல, நெப்போலியன் தம்மால் இயலாதது உலகிலொன்றுமில்லையென ஊக்கமளித்து மலையைக்கடந்து சென்றான் என்றால் இத்துணிபுக்கு இன்னவர் இளமையில் வளர்க்கப்பட்ட வளர்ப்பன்றோ காரணம்.

பண்டைக்கால அரசாங்கங்கள் குழந்தைகளைப் பாதுகாத்துவந்ததுபோலதற்போதும் இங்கிலாந்து. அமெரிக்கா,



ஜெர்மெனி, ஸ்விஜர்லந்தும் குழந்தைகள் சங்கங்கள், சுகாதாரவாரக்கொண்டாட்டங்கள், பாடசாலைகள், சிகிச்சைசாலைகள் முதலியவைகளைக்கொண்டு குழந்தைகளைப்பெற்றவர்கள் அவைகளைக் காப்பாற்றத் தகுந்த முறைகளைத் தெரிந்துகொள்ளும்படி பிரசாரம் செய்கின்றனர். ஆனால் இன்றைய இந்தியக்குழந்தைகளின் நிலைமையைச்சற்று கவனித்தால் மரண ரிஜிஸ்தர்களில் குழந்தைகளின் மரணக்கணக்கே வருடாவருடம் அதிகரித்திருக்கின்றது. இது விஷயத்தில் பெற்றோர்களே கவனம் செலுத்தி தங்கள் குழந்தைகளின் க்ஷேமலாபத்தைக் கவனிக்கவேண்டியவர்களாக இருத்தல் அவசியம்.

சாதாரணமாக இந்துக்களில் ஆணும் பெண்ணும் தகுதியற்றமுறையில் மிகவும் இளமைப்பருவத்தில் மணம் செய்து கொள்கின்றனர். பெண்கள் உடல் நிலைமையைப் பற்றியோ, கருத்தரிப்பதன் சாதனங்களைப்பற்றியோ சற்றேனும் கவனிப்பதுகிடையாது. கருத்தரித்தபிறகும் தாய்மார் தகுந்த பத்தியபாகத்துடனிருந்து சரீர திடகாத்திரமுள்ள மகவைப்பெறலாமென்னும் சிந்தனையே இல்லாதவராயிருக்கின்றனர். அங்ஙனம் பெற்ற பின்னும் குழந்தைகளுக்குத்தகுந்த முறையில் உணவூட்டி ஜீரண சக்திக்குத் தகுந்த ஆகாராதிகளைக்கொடுத்து சுத்தமான ஜலமும் காற்றும் உட்கொள்ளுமாறு செய்து ஆரோக்கியத்தைத் தேடிவைப்பதுமில்லை. எழைகளுக்கும் கூலிகளுக்குந்தான் அங்ஙனம் இயலவில்லையெனில் படித்த பணக்காரர் வீடுகளிலும் குழந்தைகளைப்பற்றி கவலைப்படுவதில்லை. சென்னை முதலிய நகரங்களில் சுத்தமான பாலும், ஆகாராதிகளும் காற்றும் கிடைக்காமல் இருமல், காசம் சோகை, வாதம் முதலிய வியாதிகளால் பீடிக்கப்படுகின்றனர். கிராமங்களிலும் பெரியவர்களுக்கு நோய் வந்தால் எத்தனை கவலைப்படுகின்

றனரோ அத்துணை கவலையும் குழந்தைகள்பால் காட்டுவதில்லை. குழந்தைகளுக்கு நோய் முதிர்ந்து ஆபத்தான நிலைமைக்கு வந்தபிறகே அங்ஙனம் கவனிக்க முயலுகிறார்கள். இதுபற்றியே நகரங்களிலும் கிராமங்களிலும் பெரும்பாலான குழந்தைகள் நோயால் உயிரிழக்கின்றனர். சென்ற வருஷத்தில் சுவாசகாச நிபுணரான டாக்டர். C. முத்து அவர்கள் கொடுத்த வாக்குமூலத்தில் இந்தியப் பெற்றோர்களின் அஜாக்கிரதையாலே ஆயிரக்கணக்கான குழந்தைகள் பாலியத்தில் உயிரிழக்கின்றனவென்றும் மேனாடுகளில் இந்தியக்குழந்தைகளில் 1/5-பங்குகூட இறப்பதில்லையென்றும் சொல்லியிருக்கிறார். இவைகளைக் கவனிக்கும்போது குழந்தைகள் விஷயத்தில் நம் நாட்டவரின் கவலைக்குறைவு இன்னதெனப் புலப்படுகிறது. இனியாவது குழந்தை மரணத்தைக் குறைப்பதற்கு அவர்களுக்குக் காணும் வியாதிகளுக்கு உடனுக்குடன் தகுந்த வைத்தியரைக்கொண்டு சிகிச்சை செய்விக்கவேண்டும். அல்லது குழந்தைகளிருக்கும் வீடுகளில் குழந்தை மருந்துகளை வாங்கி வைத்துக் கொள்ளவேண்டும்.

தொட்டிற்பழக்கம் சுடுகாடுமட்டும் என்பதுபோல குழந்தைகளின் இளம்பிராயத்திலே உண்டாகும் மூடப் பழக்கவழக்கங்கள் அவர்களுடைய ஆயுள்முழுதும் உடன் வருவன. கர்ப்பத்திலுள்ள சிசுவின் உடலில் உண்டாகும் மரு, குழந்தைபிறந்து வளர்ந்து கிழத்தன்மையடையும்வரையில் அதனுடம்பிலிருப்பதுபோல குழந்தைப் பருவத்திலமையும் குணாகுணங்களை முதுமைப்பருவத்தும் நிலைத்து நிற்கும் என்று மேனாட்டுக் கவிகளில் ஒருவரான பைரன் சொல்லுகிறார். ஆகையினால் கீழ்படிதல், காலந்தவறாமை, சுத்தமாயிருத்தல் முதலிய நற்குண நற்செய்கைகளில் குழந்தைகள் பழகுவதற்கான வழிகளைத் தேடுதலில் நாம் கண்ணுங்கருத்துமாயிருத்தல்வேண்டும்.

ஆசிரியன்.

# செய்யுள்ப் பகுதி

(சாந்தன், மதுரை.)

இப்பகுதியின்கீழ் கற்பனைக் களஞ்சியமாகவுள்ளதும், பொருள் பொதிந்துள்ளதுமான அரிய கவிகளுக்கு உரை வரையப்படும்.

ஒரு கவி யானைமுகக்கடவுளை தெரிசிக்கும் காலத்தில் அக்கடவுள் இருக்கும்தோற்றமானது "என் கைகளில் ஒன்றில் அங்குசமும் மற்றொன்றில் பாசமும் இருப்பதினால் என்னை வசம்செய்வார் இங்கு ஒருவருமில்லை" என்று நினைந்து தரிக்கி இருப்பதாக கற்பனை செய்துகொண்டு அதற்கு விடையாக "நான் உண்மை நார்(அன்பு)ஒன்றினால் கட்டிவிடுவேன்" என்று கூறியதாக அடியிற்கண்ட செய்யுளை செய்திருக்கிறார்.

"அங்குசமும் பாசமுமியா மங்கையில் வைத்தா மெய்ம்மை
இங்கு வசஞ்செய் வாரிலையென்று—தங்கு சீர்க்
காரொன்றுயர் திண்களிறே பல்காலு நினை
நாரொன்றினால் யாப்பா நாம்."

(மு. ரா. அருணாசலக் கவிராயர்)

## நடுவெழுத்தலங்காரம்.

அருந்தவன்பேர் நடுவின்பேர் கூடலின்பேர் புவிப்
பேர்நில நாட்பேராகாயப் பெயரிவ்வாறு

பெருந்தகைச் சொலொவ் வொன்று மூன்றெழுத்தா
நாப்பண் பெருநாம னிருபாலும் பேணுமெழுத்ததுவே

திருந்திய வொன்றின னுபயமுகன் மூன்று
கரத்தான் செய்யாதா னென்கிணை ப்பஞ்சம கானலோலன்

பொருந்தலர் மேற்சீரியவாறினன் ராஜவல்லி புரத்தினன்
பாவவிநாசன் புத்திர தயாநிதியே.

(அழகிய சொக்கநாத பிள்ளை.)

1. அருந்ததன் பேர், 2. நடுவின் பேர், 3. கூடலின் பேர், 4. புவிப் பேர், 5. அநிலநாள் பேர், 6. ஆகாயப் பெயர். இவ்வாறு சொற்களுக்கும் மூன்றெழுத்தாலாகிய பரியாயப் பெயர்கள் முறையே 1. மாமுனி, 2. மத்தி, 3. மதுரை, 4. வசுதை, 5. சுவாதி, 6. மீமிசை.

இவைகளின் நடு எழுத்துக்களை ஒன்று சேர்த்ததால் ஆக்கப்பட்ட நாமன்—முத்துசுவாமி. நடுவெழுத்துக்கள் போக உள்ள பதங்களை முறையே 1. மானி, 2. மதி, 3 மரை, 4. வதை, 5. சுதி, 6. மீசை இவைகளையேதான் கொண்டவன். திருந்திய ஒன்றினன்—மானி—மானஸ்தன்; உபயமுகன் — மதி—சந்திரனைப்போன்ற முகத்தையுடையவன்; மூன்று கரத்தான் — மரை—தாமரையைப்போன்ற கையையுடையவன்; செய்யாதான் நான்கினை—வதை செய்யாதவன்—காருண்யமுடையவன்; பஞ்சமகானலோலன்—சுதிகானலோலன்; பொருந்தலர்மேல் சீரிய ஆறினன்—பகைவர்களைக்கண்டமாத்திரத்தில் மீசை துடிக்கும்படியாக உள்ளவன். இப்படிப்பட்டவன் ராஜவல்லிபுரத்திலுள்ள பாப விநாசனன் என்பவரின் புத்திரன் ஆவான்.

## நடுவெழுத்தலங்காரம்.

தாசரதி தாய்மகன் ஆசைவரன் தேரோட்டுவர் பெண்
ணேசயினை நடுவே நீ தருவாய்—பேச
வெடுத்து பிடித்து கண்டுயின்று தோன்றி அளந்
துகுத்த சத்புருட ராமசாமி.

(தெய்வசிகாமணி அய்யர்)

தாசரதி தாய்—கோசலை, மகன்—மதலை, ஆசை—ஆலல், வான்—புராரி, தேரோட்டுவர்—பாகர், பெண்—கன்னி இவைகளின் நடு எழுத்துக்கள் ஆகிய சதவராகன்ஐ நீ கருவாய் நடு எழுத்துக்கள் போக மற்ற எழுத்துகளால் ஆகிய பதங்கள் முறையே கோலை, மலை, ஆல், புரி, பார், கனி இவைகளை முறையே கோலை எடுத்தும், மலையைக் குடையாகப் பிடித்தும், ஆலிலையில் கண்துயின்றும், புரியில் தோன்றியும், பாரை (பூமியை) அளந்தும், கனியையுகுத்தும், லீலை செய்யும் விஷ்ணுவின் அம்சமாக கருதத்தக்க ராமசாமி என்னும் நாமத்தையுடையோனே என்பதாம். (தொடரும்.)



# திருப்பழநி மாம்பழக்கவிச்சிங்க நாவலரவர்களும் — சீட்டுக்கவிகளும்.

(கோவை. திரு. சி. கு. நாராயணசாமி முதலியார் அவர்கள்.)

(146-ம் பக்கத் தொடர்ச்சி.)

தீட்டுக்கவி என்பது சீட்டுக்கவி என மருவி வழங்கப்படுகிறது. தீட்டுக்கவி — எழுதப்படுங்கவி. தீட்டுதல் என்பதற்கு எழுதுதல் என்பது பொருள். சித்திரந்தீட்டுதல், மை தீட்டுதல், கோலந்தீட்டுதல் என்பன எழுதுதல் என்ற பொருளிலேயே அமைந்திருக்கின்றன, பண்டைக்காலத்தில் புலவர் பெருமக்கள் திருமுகமும் பாட்டிலேயே எழுதுதல் வழக்கம். சீட்டுக்கவிகளில் புலவர்கள் தமது புலமையைக் குறித்தும், தம்மைப்பற்றியும் புகழ்ந்து எழுதுவர். அவை:-

"ஏடாயிரங் கோடி எழுதாது தன்மனத்
தெழுதிப் படித்த விரகன்
இமசேது பரியந்தம் எதிரிலாக் கவிவீர
ராகவன் விடுக்கு மோலை"

(அந்தகக்கவி வீரராகவ முதலியார்)

## II.

"கொஞ்சுகவி யானையை வசைக்கவி யெயிற்றிறுற்
குகவி யுயிரான் மருட்டும்
குடிலகவி ராஜசிங் கங்களைப் பங்கஞ் செய்
கும்ப சரபத்தி ேனோலை"

(குடந்தைக் கும்பகவி)

## III.

"சொல்லத் தமிழ்க்கவிசெலுத்திவாய் விண்பெற்ற
கும்பனெனு மொரு தந்தியைக்

கொத்தியுண் டமிழண்ட பேரண்ட மென்னவரு
கூர் படிக்காச னேலெ"

(படிக்காசுத்தம்பிரான்)

## IV

"புனிதமிகு நாற்கவி விலாசன் மெய்த்தவ
ஞானபூர ணன்சை வாகமப்

பொக்கிஷ மதான சங்கரலிங் கமுனிவனிரு
பொற்பதந் தன்னை நிதமும்

போற்றுசெய முத்துவே லாயுதக் கவிராச
பூபன் வரவிட்ட நிருபம்"

(சாந்துக் கவிப்புலவர்)

## V.

"தாதைந்து நாழிகையில் ஆறுநா ழிகைதனிற்
சொற்சந்த மாலை சொல்லத்

துகளிலா அந்தாதி எழுநா ழிகைதனிற்
தொகைபட விரித்துரைக்கப்

பாதஞ்செய் மடல்கோவை பத்துநா ழிகைதனிற்
பாணியொருநாள் முழுதுமே

பாரகா வியமெலாம் ஓரிரு தினத்திலே
பகரக் கொடிகட் டினேன்"

(காளமேகப் புலவர்)

என வரும் சீட்டுக்கவித் தொடர்களாம். மேற்கண்ட புலவர்கள்சீட்டுக்கவி எழுதுவதில் மிகவும் வன்மை வாய்ந்த



வர்கள். இங்ஙனம் அவர்கள் எழுதுதலை இலக்கண நூலாரும் ஒப்புக்கொண்டிருக்கின்றனர்.

இனிநாம் நமது மாம்பழக்கவிச்சிங்கநாவலரவர்கள் சீட்டுக்கவிகளை இதுவரையும் அச்சுவாகன மேறாதவற்றையே இங்கு குறிக்கின்றோம். அவை கவிச்சுவையை விரும்புவார்க்குப் பெரிய இன்பத்தை யூட்டுவனவாம். பிற புலவர்களைவிட சீட்டுக்கவிகளை மிகுதியினும் மிகுதியாக எழுதிப் பிரபுக்கள்பாற் சம்மானம் பெற்றவர் மாம்பழக்கவிச்சிங்கக் கவிராயரவர்களேயாவர். அக்கவிகளில் ஒன்று அடியில் வருமாறு.—

### பஞ்சப்பிரம்ம சந்ததியார் குருவும்,
### போதலூர் ஸ்ரீ விராட் வீரப்பிரம்ம மடாதிபதியும் ஆகிய
### ஸ்ரீலஸ்ரீ அரிகராய ஆச்சாரிய சுவாமிகள் மீது
### பாடியது.

(முப்பத்திரண்டடி ஆசிரிய விருத்தம்.)

"திருமலர் மிசைப்பிரம தேவவுரு வாய்ப்பல
சிருஷ்டியு நடாத்து சமுகம்

சிதரா னந்தகோ விந்தனென நின்றவை
திருந்த ரட்சித்த சமுகம்

சிகரகயிலா சருத்திர சொரூப மதாய்ச்
செகத்தெலா மாற்று சமுகம்

தெளிமயே ஸ்வரனெனுந் தெய்வமாய்த் தோன்றித்
திரோபவ மியற்றி சமுகம்

சிற்பர சதாசிவப் பொருளாயனுக் கிரகஞ்
செய்யுஞ் சிலாக்ய சமுகம்

திரளண்ட கோடியேந்திய விராட் டாகிச்
சிறந்து நிற்கின்ற சமுகம்

திவ்யதேஜோ மயபரப் பிரம்மமாகி யெத்
திசையினும் நிறைந்த சமுகம்

சித்தர்கின் னரருரகர் வித்யாத ராக்ஷகண
தேவர்கள் பரவு சமுகம்
மருவுலவு வனதபோ தனகிரு விகர்ப்பமுனி
வரர்வரம் வேண்டும் சமுகம்
வரிசைமனு மயத்வஷ்ட சில்ப்பி விஸ்வக்ஞகுல
வர்க்கப் பிரதான சமுகம்
மந்த்ரவே தாகம புராணஷட் சாஸ்திரவித
மங்கள விலாச சமுகம்
மாகற்பனு காவ்ய நாடகா லங்கார
மதுரப் பிரசங்க சமுகம்
மகரசல நிதியமிர்த வசனசா மர்த்தய சாலி
வாணர்கள் வழுத்து சமுகம்
வாணிசெந் திருவிஜய வனிதையென் னோரமும்
மகிழ்ந்து குடிகொண்ட சமுகம்
மணிமுரசு பேரிகைதடா ரிதுந்து பிதிமிலை
வகைதொ னிக்கின்ற சமுகம்
மத்தளமி டக்கைகைத் தாளமலகோ சைகுழல்
வழுவாம லிசைகொள் சமுகம்
தருணமுனார் சின்னமெக் காளமொடு பூரிதுத்
தாரிக ளியப்பு சமுகம்
தவளசங்கக் கொம்பு கர்ணுக்கள் வாங்காத்
தனித்தனி சிலம்பு சமுகம்
சாரங்கி வீணைதம் புருபிடில் வேணுவித
தமவாத்ய கோஷ்ட சமுகம்
தரிகிடத் ததிங்கிணத் தோமெனு மடந்தையர்
சதா நடனகீத சமுகம்
தடகரட குஞ்சர துரங்கவொட் டககன
சைன்ய கெம்பீர சமுகம்
தண்டிகை சுருட்டிமச கிரிசிவிகை கொடிகள்வெண்
சாமரைகள் பரவு சமுகம்



சரியலாச் சமயகண் டனவுஜி த[illegible]ணமுதலி
தாபனு சார்ய சமுகம்
தாரித்ர தோஷாந்த கார[illegible]லத்தைத்
தகர்க்குந் தயாள சமுகம்
விருதுபுனை யணிமாதி யஷ்டசித் திகளும்
விளைத்துத் தழைத்த சமுகம்
வேதாளபூ தபஞ்சன துஷ்ட [illegible]
விபூதிப் பிரசாத சமுகம்
விந்தைதரு மெந்த்ரதந் த்ரானுபவ பாண்டித்ய
வித்யா விநோத சமுகம்
விபவசிவ யோகதிட மெய்ஞ்ஞான வுபதேச
மேன்மைப் பிரதாப சமுகம்
விரிபொழிற் போதுலூர் வீரப்பிரம் மேந்த்ரவடி
வேஷ வவதார சமுகம்.

V.

மிகுமாத்ம ராமமய ஸ்ரீஜெகத் குருவாய்
விளங்கு முத்துங்க சமுகம்
விமலபஞ் சப்பிரம்ம யாகமுத லுளசகல
வேள்வியும் நிறப்பு சமுகம்
வினைதீர்க்கு மரிஹராயாச் சார்யகுரு சுவாமி
வீற்றிருந் தருள் சமுகமே".

(தொடரும்)


## பத்திரிகை வருகிறதா?

பிரதி மாதமும் தவறாமல் "சித்தன்" அனுப்பப் படுகிறது. இத்துடன் 6-பிரதிகள் ஒவ்வொருவருக்கும் கிடைத்திருக்கலாம். அதன் வருடச்சந்தா அணா 8. மிகக்குறைந்த கட்டணம். இதைக் கூடிய சீக்கிரம் அனுப்பும்படி சந்தாநேயர்களை கேட்டுக்கொள்கிறோம்.

மானேஜர், "சித்தன்," பழனி.

# தேன் ஆறு.

( ஸ்கேலிடன். )

இஃது பல்வேறு இயற்கை வளங்கள் நிறைந்த மலையாள தேசமாகிய பாலக்காட்டுக்குக் கிழக்கே 8-மைல் தூரத்திலுள்ள ஓர் அதிசயிக்கத்தக்க நீர் நிலையாகும். எவ்வளவு காலம் மழை பெய்யாதிருப்பினும், அக்கம் பக்கங்களில் தண்ணீர் அகப்படாத சமயத்திலும் இதில்மட்டும் குறைவின்றி ஜலத்தைக் காணலாம். ஆதலால் இதை ஓர் "நீர் பொக்கிஷம்" எனக்கூறினும் மிகையாகாது. மேலும் இதன் நூதன இயற்கையமைப்பு இதற்கு ஓர்வித தனிச்சிறப்பைக் கொடுத்திருக்கிறது. அதாவது இவ்விடத்தில் சுமார் 6-அடி நீளம், 6-அடி அகலம், 6-அடி உயரத்தில் தொட்டிபோன்ற ஓர் சிறிய அழகிய கிணறு உளது. இஃது தரைமட்டத்திலிருந்து 6-அடி உயரத்தில் இருப்பதுதான் மிகவும் ஆச்சர்யம். கிணற்றின் அடியிலிருந்து தண்ணீர் வெகுவேகத்துடன் ஊறி பூமிக்குமேல் சுமார் இந்த 6-அடி உயரம்வரையும் யாண்டும் தாழ்வின்றி நிரம்பி நிற்கும் காக்ஷி பார்ப்போருக்கு வியப்பை உண்டுபண்ணுகிறது. இதிலிருந்து 5-அடிக்கு வடபுரம் ஓர் கற்குழாய் வாயிலாக சதா ஓய்வின்றி நீரானது குழாய் ஜலம்போல் வழிந்தோடிக் கீழே விழுந்துகொண்டேயிருக்கிறது. இந்த ஸ்நானக்கட்டத்தில் ஸ்நானம் செய்வோர் அல்லும் பகலும் அனந்தம். உண்மையில் இதைக்காண்போர் யாராயினுஞ்சரி உடனே இதில் ஸ்நானம் செய்யாமல் திரும்பார் என்பது திண்ணம். இதில் இன்னொரு விசேடம் என்னவென்றால் மாரியைவிட கோடையில் தண்ணீர் அதிகம் என்பதாம். அதிலும் பரிசுத்தமான ஜலம். எனவே இஃது தேன்போன்ற ஆறு என்பதில் சந்தேகமேயில்லை. அதற்கேற்ப இது ஓர் அற்புதமான தீர்த்த ஸ்தலமாய்த்திகழ்கின்றது. என்னே இயற்கையின் விசித்திரம்!

இது இவ்வாறாக இதன் புராணக்கூற்றைக் கவனிப்போம். இப்பாழும் நாட்டில் கல், மண், களிமண், மரம்,



பாம்பு முதலியனவெல்லாம் தெய்வங்களாகக் கொண்டாடப்பட்டுவரும்போது ஜாதியாணவமும், குருட்டு நம்பிக்கையும், வைதீகப்பேயும் தலைவிரித்தாடும் கேரளத்தில் புராண ஆபாசத்தைக் கேட்பானேன்? என்னே நம் மக்களின் அறிவும் ஆராய்ச்சியும் இருந்தவாறு! வெட்கம்! வெட்கம்!!

எனவே இந்நீர் நிலையையும் அப்புராணப்பேய் பற்றிக்கொண்டதில் ஆச்சர்யமொன்றுமில்லை. பண்டு சீதாதேவியின் நிமித்தம் ஸ்ரீ ராமபிரான் இலங்கை நோக்கிச்செல்லுங்கால் ஈண்டு இலக்குவன் முதலாயினோரோடு தங்க நேர்ந்ததென்றும், அதுசமயம் தனக்குத் தாகமெடுக்கவே ஓர் அஸ்திரத்தைப் பிரயோகித்துக் கங்கையைத் தருவித்து, தாகசாந்திசெய்துகொண்டதாகவும் அவ்வஸ்திரம் பூமியில் பட்டபாகமே இக்கிணறு என்றும், அதுமுதல் இதில் தண்ணீர் குறைந்ததில்லையென்றும், இது காசி கங்கையேயென்றும் கூசாமல் கூறப்படுகிறது. இதற்கேற்ப இங்கு இராம விக்ரகங்களும், பாதங்களும் கல்லால் சமைக்கப்பட்டிருக்கின்றன.

"எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும்
அப்பொருள் மெய்ப் பொருள் காண்பதறிவு"

என்ற நாயனார் வாக்கிற்கிணங்க, நாம் நமது அறிவின் திறமையால் இதன் நுட்பத்தை அறிந்துகொள்வதே சாலப்பொருந்தும். நிற்க, கேவலம் ஓர் அற்ப காரணத்தை முன்னிட்டு ஸ்ரீ ராமன் ஓர் அரிய அம்பைச் செலவழித்திருக்கவேண்டிய அவசியமேயில்லை. நினைத்த அளவில் காரியத்தை முடிக்கும் சர்வ வல்லமையுள்ளவரன்றோ அவர்?

முடிவில் இதை நன்கு கவனிப்பின், இது ஓர் அரிய ஊற்று (Spring) என்பதே நமது துணிபு. மேலும், விசாரித்தளவில் சில இஞ்சினீயர்களும் இயற்கை ஆராய்ச்சியாளர்களும் இவ்வாறே கூறுகின்றனராம். ஆதலால் நமது வாழ்விலும், காரியாதிகளிலும் பகுத்தறிவிற்கு ஓரளவு இடங்கொடுத்து, மூடக்கொள்கை, பிடிவாதம், குருட்டுப் பழக்கம் முதலிய நோய்களை இன்றே நீக்கி 'மிஸ் மேயோ' போன்ற மாதரசிகள் நம்மை எள்ளி நகையாடாமல் ஞான சிகாமணிகளாய் இனிது வாழ்வோமாக.

# நூதன அநுபவ அலங்கார ரத்னம்.

(திரு. மு. கா. அம்பலவாணன் அவர்கள்.)
சமஸ்தான வித்வான், இடையகோட்டை.

148-ம் பக்கத் தொடர்ச்சி.

இந்தியா முழுதும் கிறிஸ்துவ ராட்சி
எங்கும் கிளம்பியது ஏன்?
முந்திய அரசர் தம்மினின் ஒற்றுமை
முற்றும் முரணியதால் (15)

திராவிட வேதம் மூவர் தேவாரம்
செப்பிய நன்மைய தேன்?
பராவரும் புகழ மாபெரும் சைவம்
பண்புட னிலகுதற் கே. (16)

புத்தர் கிறிஸ்து சுக போகத்தைப்
புறட்டி எறிந்தது ஏன்?
சத்திய மானதன் னலமற்ற
தன்மை யுணர்ந்த தனால். (17)

அயலான் பொருளைப் பிறர் காணுவகை
அடுத்துத் திருடு வதேன்?
செயிலார் விருந்தும் போலீஸ் அன்பும்
சிறப்பாய்ப் பெறுதற் கே. (18)

மானங் கெடுக்கு மதுவைக் குடித்து
மயக்கம் உறுவது ஏன்?
தானங் கெடுத்துக் கொலைக் கிலக்கான
தன்மையை யுறுதற் கே. (19)

சூதாட்டத்தை மிக விருப் போடு
சுகமென்று டுவதேன்?
மாதார் தீட்டுச் சேலையைக்
காணு வகையது செய்தற் கே. (20)



தரமில்லாதவர் தெருவில் கிராப்புத்
தலையோட லைவது ஏன்?
சங்கையி லாத பெண்களை மயக்கித்
தப்பித் தோடு தற்கே. (21)

பள்ளிப் பிள்ளைகள் பீடி சிகரெட்
பற்றிப் பழகுவ தேன்?
பாரிற்ற ந்தையர் சொத்தை முழுதும்
பராரி யாக்குதற் கே. (22)

அடுத்தவன் செல்வம் பார்த்துப் பொருமி
அல்லல் உறுவது ஏன்?
கெடுத்துத் தவத்தை மனை மக்களோடு
கெட்டுத் தொலைத் தற்கே. (23)

உற்றார் பெற்றார் நட்பைக் கழட்டி
ஓடி ஒழிவது ஏன்?
வற்றுச் செல்வம் குறையது பட்ட
மாண்பத னால். (24)

ஊரினிற் போக்கிரி பேச்சைக் கேட்டு
உள்ளங் குளிர்வது ஏன்?
பாரினில் ஜோட்டடி கிடைக்குமதே என்ற
பயமத னால். (25)

அடக்க முடையா னொருவன் றனக்கு
ஆதர வில்லா தேன்?
நடக்கும் மாட்டைப் பிடித்தல் மனிதர்
நல்ல சுபாவ மதால். (26)

கொடுக்கத் தெரியா உலுத்தருக்குப் பொருள்
கூடி மகிழ்வது ஏன்?
அடுத்துக் கெடுக்கவும் ஊரைச்சின்னா பின்னம்
ஆக்கு தற்கும். (27)

தாம் தெரியா அறிவினர்களுக்குப்
பணம் தங்குவதேன்?
அறநெறி திரிந்து ஊரும் குட்டிச்சுவர்
ஆகுதற்கே. (28)

பெருத்தவர் ஏழ்மையைப் பேசிச் சிரித்து
பெருமையை யடைவது ஏன்?
சிறுத்துப் பெருத்தவர் கைகொட்டிப் பேசி
சிரிப்பதற்கே. (29)

உள்ளது வைத்து இல்லையென்று சொல்லி
ஒதுங்கிப் போவது ஏன்?
கள்ளர்க்கும் பொல்லாக் குறவர்க்கும் தெண்டம்
கட்டுதற்கே. (30)

பொய்யன் அடிக்கடி கச்சேரி ஓடிப்
புரளி செய்வது ஏன்?
மெய்யனின் வாழ்க்கை உன்னத நிலையில்
மேம்படவே. (31)

ஆடு மேய்த்தவன் சாவடி யுறங்கி
அலாசி வளாசுவதேன்?
பாடு மேம்படப் பணமது கைவந்த
பண்பதனால். (32)

தெருவினிற் பெண்டுகள் சண்டைகள் போட்டுத்
திரிந்து உலாவுவதேன்?
உருவினிற் புருஷன் பலமுடையானென்ற
உறுதியினால். (33)

எல்லா நிலையும் தெரிந்தவன் போற்பிறரை
ஏசுவதேன்?
கல்லா மாந்தர் பற்பலர் தம்மைக்
கைவசமாக்குதற்கே. (34)

(தொடரும்)



# மாதர் பகுதி.

## 'ரஷ்யாவில் ஸ்திரீகள் நிலைமை.'

(தோழர், A B. ஆதித்தர்.)

சென்றமாத சித்தனில் அகிலமெல்லாம் "ஆண் பெண் பேதம்" அசைக்கமுடியாமல் இருப்பதாக அறிவித்திருந்தோம். அதனைக்கண்ணுற்ற சமதர்மத்தோழர்கள் சிலர் ரஷ்யா தேசத்தில் ஆண் பெண் பேதமில்லாமல் வாழ்க்கை நடைபெற்றுவருவதாக நம்மிடம் நவில்வதானார்கள். அவர்களுக்கு இதனை எழுதுகின்றோம்.

பெண்மையில் ஆண்மைகண்ட வீரமிக்க ரஷ்யா தேசத்தில் ஸ்திரீகள் உத்தியோகங்களில் அமருவதற்கு குடும்ப வாழ்க்கை தடைசெய்யக்கூடாதென்று தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறது. எந்தக் குடும்ப ஸ்திரீயும் தன் ஜீவனும்சத்திற்குக் கணவனை எதிர்பார்க்கவேண்டியது இல்லையென்று பொதுவுடைமைக்கொள்கை கூறுகிறது. ஆங்கு சேய்களைப் பெற்றெடுக்கும் தாய்களுக்குச் செய்யும் சௌகர்யங்கள் நம் உள்ளத்தைக் கவர்கின்றன. கர்ப்பவதிகள் பதிவு செய்யப்பட்டு, கர்ப்ப வளர்ச்சியும் ஜாக்கிரதையாகக் கண்காணிக்கப் பட்டுவருகிற்து. இதற்கு ஆலோசனை கூறும் நிலையங்களில் கர்ப்பத்தடைக்குரிய பல முறைகளையும் பெண்மக்களிடையே போதித்து வருகிறார்கள். ஒரு பெண் தனக்குக் கர்ப்பச்சிதைவு தேவை என்று எண்ணினால் சுகாதார இலாக்காவோடு இணைக்கப்பட்டுள்ள பிரத்தியேகமான கர்ப்பச் சிதைவு கமிட்டிக்குத்தெரியப்படுத்தவேண்டும். இந்தக்கமிட்டிக்கு கர்ப்ப ஸ்த்ரீயின் தேக நிலைமையை அறிந்து கர்ப்பச் சிதைவைச்செய்ய அனுமதியளிக்க அதிகாரமுண்டு. இந்தத்

தீர்ப்பு சமுதாயம், சுகாதாரம், சரீர நிலை ஆகியவைகளைப் பொருத்ததாகும். கர்ப்ப ஸ்திரீகளைப் படுக்கவைத்திருக்கும் பிரசவ ஆஸ்பத்திரியோடு பெண் டாக்டர்கள் நெருங்கிய சம்பந்தமுள்ளவர்களாக இருக்கிறார்கள். டிரேட் யூனியன் (தொழிலாளர் சங்க) அங்கத்தினர்களுக்கும், அல்லது அவர்களின் மனைவிகளான பெண்களுக்கும் இந்தப்பிரசவ ஆஸ்பத்திரிகளில் சலுகை காட்டப்படுகிறது. மூன்று வயதிற்குட்பட்ட சகல குழந்தைகளும் அந்தந்தவிடத்திலுள்ள ஆஸ்பத்திரிகளில் பதிவுசெய்யப்பட்டு முறையாக அவ்வப்போது பரிசோதிக்கப்பட்டு வருகிறார்கள். தாய்மார்கள் குழந்தை பாதுகாப்பு விஷயமாக போதிக்கப்படுகிறார்கள். வீடுதோறும் சென்றுவரும் தாதிகளின் நிலயம் ஆஸ்பத்திரியோடு அமைக்கப்பட்டிருக்கிறது. இந்தத்தாதிமார்கள் குழந்தைகளின் வளர்ச்சியை வீடுகள் தோறும் சென்று கவனித்துவருகிறார்கள். குழந்தைகளுக்கு அத்தியாவசியமான பால் வினியோகிக்கும் அறைகளில் மலிவான விலைக்கு வினியோகிக்கப்படுகிறது. பெண்கள் தங்கள் வேலையைத் தொடர்ந்து செய்யும்பொருட்டும், அவர்களது சௌகர்யங்களை உத்தேசித்தும், குழந்தை பாதுகாப்பு நிலயங்கள் ஒவ்வொரு பெரிய தொழிற்சாலைகளிலேயும் அல்லது சில தொழிற்சாலைகளுக்கு மத்தியிலேயும் அமைக்கப்பட்டிருக்கிறது. இன்சூர்செய்யப்பட்டவர்களின் குழந்தைகள் தாய்மார்கள் வேலை செய்துகொண்டிருக்கும் வரையில் பாதுகாப்பு நிலயத்தில் தாதிகளால் கவனிக்கப்பட்டு மாலையில் அக்குழந்தைகள் அதனதன் தாய்மார்களிடம் சேர்க்கப்படுகின்றன.

ருஷ்ய அரசாங்க உத்தியோகங்களில் 100-க்கு 8 ஸ்தானங்கள் பெண்களுக்கு அளிக்கப்பட்டிருக்கின்றன. ஒரு ருஷ்யப்பெண் அன்னியநாட்டு ஸ்தானாதிபதியாக நியமிக்கப்பட்டிருக்கிறார். 1926-ம் வருஷம் 146 பெண்கள் சட்டங்கள் கற்று நீதிவான்களாகவும், வக்கீல்களாகவும் அலுவல் பார்த்துவந்தார்கள். சில பெண்கள் மின்சார இயந்திரங்களை ஓட்ட முன்வந்திருக்கிறார்கள். வேறு சில பெண்கள் நாவிதர் அலுவல் செய்கிறார்கள். இதனாலெல்லாம் அங்கு



ஆண் பெண் பேதமில்லையென்றோ பெண்கள் ஆண்கள் போன்றவர்களாகிவிட்டனரென்றோ சொல்லிவிட முடியாது.

சென்ற 1934-ம் வருடம் தோழர் நித்தியநாராயண பானர்ஜீ ரஷ்யாவில் சுற்றுப்பிரயாணம் செய்தார். அவர் ரஷ்ய வழிகாட்டிப்பெண்ணுடன் "பிராமிலாகிங்டம்" என்ற பெயருள்ள உள்நாட்டுச் சுற்றுப்பிரயாணி ஆபீஸின் கண்ணாடிக்கதவைத்தள்ளி உள்ளே சென்றதும் மிக ஆச்சரியப்பட்டார். அங்கே பெண்கள் மட்டுமே இருக்கின்றனர். ஒரு ஆண் குமாஸ்தாவையாவது காணமுடியவில்லை. எல்லோரும் பெண்களாகவே இருந்ததும் தோழர் பானர்ஜீ உடனே தனது வழிகாட்டியைப்பார்த்து 'நல்லது, நீங்கள் ஆண்களை ஆபீஸ் உத்தியோகம் செய்யவேண்டாமென்று விரட்டி விட்டீர்களா?' என்று கேட்டார். அதற்கு அவள் 'சரிதான், அவர்கள் பலமுள்ள வேலைகளைச் செய்யவேண்டும். எல்லா ஆண்களும் தொழிற்சாலைகளிலேயே வேலை செய்கின்றனர். ஆகையால் இத்தகைய சுலபமான வேலைகளை எல்லாம் நாங்கள் செய்யவேண்டும்' என்று பதிலளித்தாள். உடன் பானர்ஜீ 'நீங்கள் இப்போது உயர்ந்த வகுப்பினராகவும், ஆனால் ஆண்கள் கீழ்த்தர வகுப்பினராகவும் உள்ளனரே' என்று நகைத்துக்கொண்டே நவின்றார். 'ஆனால் நாங்கள் கடினமான வேலையைக்கண்டு பயப்படுவதில்லை. இத்தேசத்தில் பெண்கள் உழைப்பாளிகளாகவும், இயந்திரங்களை ஓட்டுபவர்களாகவும், இராணுவ வீரர்களாகவும், கப்பலில் சென்று அயல்நாட்டு அரசாங்கத்துடன் வியாபார விஷயத்தைக் கவனிக்கச் செல்பவர்களாகவும் இருக்கின்றனர். எங்கள் தேக நிலைமையை முன்னிட்டு நாங்கள் எந்த வேலையையாவது செய்கின்றோம். ஆனால் நாங்கள் வேலை செய்ய வேண்டுமென்று பயப்படுவது கிடையாது என்று அவள் அவரை மறுத்துப்பேசினாள். பெண்கள் எந்த வேலையும் பார்க்கலாமானாலும் அதிக சரீரப் பிரயாசையுடன் செய்ய வேண்டிய வேலைகள் மட்டும் ஆண்மக்களுக்கே ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இன்றைய ரஷ்யாவில் ஸ்திரீகள் நிலைமை இதுவே.

# வேண்டாம் விதவைகள் துயர்.

(புதுவை. திருமதி ஆர். எஸ். ராஜலக்ஷ்மி அம்மாள்)

'பண்டித மோதிலால் நேரை' என்ற மெட்டு.

பல்லவி.

மாதர் மறு மணத்தை மகிழ்வாய்ச் செய்வீரே
மகிழ்வாய்ச் செய்வீரே இந்த மானிலத்தோரே (மா)

அனுபல்லவி.

காதல் மணந் தன்னையே
காசினியிலே நிகழ்த்தி

ஓதும் விதவை துயர் ஓட்டிடுவீரே
ஓட்டிடுவீரே மகிழ் ஊட்டிடுவீரே (மா)

தோகையரா.

ஏராளமாய் நமது இந்து நாட்டிற் பெண்கள்
ஏங்கியே வாடுகின்றார்
சீராயவர்களின் சிந்தை துயர் போக்கிடச்
செய்வீரே தினந்தான்
பாராமல் பெற்றோர்கள் பால்ய மணம் செய்ததால்
பாரில் வந்ததித் தீதுதான்
நேரா யதனையே நீக்கி நல் மணமதை
நேர்மையாய்ச் செய்குவீர் தான்

அனுபல்லவி எடுப்பு.

கைம் பெண்ணின் கண்ணீர் தனை
கண்டு மன மிரங்கிடுவீர்
அன்புடனவர்கள் துன்பம் அகற்றிடுவீரே
அகற்றிடுவீரே பால்யமணம் தகர்த்திடுவீரே (மா)



தோகையரா.

மணமென்றா லின்னதென வறியாத மதலைக்கு
மணம் செய்வது நீதியோ?
பணமென்றால் பிணமும் வாய் திறக்குமென்ற பழமொழியைப்
பற்றி நடப்பதுவும் சரியோ?
குணமான பெண்களை கொடுமைக் குள்ளாக்குதல்
குவலயத்தில் முறையோ?
கணமேனும் கன்னியர் களிப்பின்றி வாடுதல்
காசினி செய்த குறையோ?

அனுபல்லவி எடுப்பு.

விதவை என்ற பட்டமதை
விரட்டிடுவீர் நாட்டைவிட்டு
இதமுடன் மறுமணங்கள் எங்கும் ஏற்பட்டு
எங்கும் ஏற்பட்டு பெண்கள் துன்பமே விட்டு (மா)

(சுதந்தரன்)


## வாலிபத்தில் தாத்தா.

வாலிப வயோதிகனே! உன் திடகாத்திரம் எங்கே? உன் தேஜஸ் எங்கே? இவ்வளவு சிறு வயதில் பற்கள் போய்விட்டதே! பற்களைக் காப்பாற்றிக்கொள்ள வழிதேடவில்லையா? ஒரு பல்தானே போய்விட்டது. மற்ற பற்கள் ஆடுகிறதா? வலியுண்டா? கூடிய சீக்கிரம் எல்லாப் பற்களும் விழுந்து விடுமென்றே! பற்கள் போய்விட்டால் உன் பவுசும் போய்விடும். ஆதலால் தாமதியாது C. M. சாமியின் கல்நார் பற்பொடியை உபயோகி. பற்கள் உறுதியாகவும், பளபளப்பாகவும் முகம்வசீகரமாகவும் தோன்றும்.

பாக்கட் 1-க்கு விலை அணா 1.

கிடைக்குமிடம்:-

மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி.

# குணவாகடம் 3000.

( சாமி, விருதை, சிவஞான யோகிகள். )

(161-ம் பக்கத் தொடர்ச்சி.)

கொய்கின்ற வாந்தியுடன் பேதி யாகி
குடிகெடுத்த சுரந்தன்னை விசரச் செய்து
கைகால்கள் முழுவதுமே அயர்ந்து போயிக்
கண்டிப்பாய்க் குன்மமது உண்டாந் தானே. (40)

குன்மமது தான்வருகும் வேளை தன்னில்
குணமான சடமனல் குறைந்து போகும்
அன்னமது பெதசைசத் தசன பாகில்
அப்போது மேல்வயிற்றின் இடது பக்கம்
சின்னமுற வலிகண்டு வேதனைகள் செய்து
சிறப்பான குலைவயிற்றில் புடைப்புக் காணும்
வன்னமுள்ள வாய்வதுதான் மேலே நோக்கி
வகையான புளித்தேப்பம உண்டாந் தானே. (41)

உண்டான போதுமலக்கட்டிப் போகும்
உத்தமனே மார்துடிப்புக் காணும் பின்னால்
நண்டான நாடியது ஓட்ட மாகி
நலமான மனதுதான் தத்த ளிக்கும்
திண்டான தீனிப்பை தன்னி லய்யா
திரமான வாய்வுதான் சேர்ந்தால் கேளு
சுண்டான சுவாசமது முட்டல் காணும்
சொல்லொணுத் துயரத்தை எண்ணு வாரே. (42)

எண்ணுதற்கு இன்னமொரு விதத்தை யானும்
இதமாகச் சொல்லுகிறேன் இன்ப மாக
நண்ணிவரு கின்றவன் ஞசயத்தி லய்யா
நலங்கெட்ட பின்னலே ரணமப் போது



குண்ணிதமாய்க் குலைவயிற்றில் வேதனைகள் செய்யும்
குடிகெடுத்த புண்ணதுதான் இருக்கு மய்யா
நண்ணியதைக் தானறிந்து பார்ப்ப வற்கு
நலமான குறியதனைச் சொல்லக் கேளே. (43)

கேளடா தீனிப்பை யதனில் தானே
குடிகெடுத்த வியாதியது கண்ட தானல்
நாளடா போசனந்தான் செய்த பின்பு
நலமான வேதனைக ளதிக மாகும்
மூளடா அதின் தொழில்தான் பேதப் பட்டால்
முக்கியமாய்ப் போசனத்தால் வேதனைகள் தீரும்
வாளடா விரணத்தில் வேதனையே கண்டால்
வளமாக எப்போதும் இருக்கும் பாரே. (44)

பாருநீ ஆகார முள்ளே சென்றல்
பாரித்து நோவதுதா னதிக மாகும்
கூரேநீ இந்தவிதம் தெரிந்து கொண்டு
குறிப்பாகச் சொல்லுவாய் ரோகந்தன்னை
சீரான இடுப்புவலி கைகால் நோவு
சிரோபாரம் குலைஎரிவு பிரமை காணும்
தீராத தீனிப்பை முழுக்குண் டாகில்
திரமான குன்மமென்று சொல்லு வாயே. (45)

சொல்லுவேன் இன்னமொரு பாகந் தன்னை
சூட்சமமாய் நீயறிய புரைப்பேன் கேளாய்
கொல்லுகிற குன்மமே தனையின் பாகம்
குணமாக நான்குவிதம் உண்டா மப்பா
வெல்லுவேன் வெறுவயிற்றில் நோவே கண்டால்
விருப்பமுடன் போசனந்தான் செய்தால் தீரும்
சல்லியமாய்ச் சாப்பிட்ட உடனே நோவு
தான் வரலும் சிலருக்குத் தன்மை தானே. (46)

தானாக அன்னமது செரிக்கும்போது
தான் கோவு இருப்பதுவும் சிலருக்குண்டு
மானாக மாண்பருக்கு வாந்தியானால்
மகத்தான வயிற்று நோயுடனே தீரும்
தானான ஆகாரம் கொண்ட பின்பு
தொல்லுலகில் சிலருக்குச் சொல்லக் கேளாய்
ஊனாக நாழிகை யிரண்டுக் கப்பால்
உண்டாகும் வயிற்று நோயுள்ள தாமே. (47)

ஆமே தான் இன்னொன்று நிதானமின்றி
அப்பனே காலபேத மாகக் காணும்
தாமேதான் அடிவயிற்றைச் சுருட்டிப்பற்றி
தாரணியில் மாதருக்குக் காணும் நோவாம்
போமேதான் வாந்தியுட காரணத்தைச் சொல்வேன்
புகழான திபனந் தனக்கு மப்போ
கோமேதான் கொதிப்புச் சூடதிர்ச்சி கண்டால்
குறிப்பாக வாந்தியது குறிக்கும் பாரே. (48)

## விக்கல்.

குறிப்பான விக்கலது உண்டாம் நேர்மை
கூறுகிறேன் நீயறியக் குணமாய்க் கேளு
சிறப்பான ஈரல் தாங்கிச் சிதைக்குதய்யா.
சீரான தீனிப்பை தனக்குமப்போ
தெரிப்பான வலிகண்டு படுவதாலே
திரமான விக்கலது தானே காணும்
விரிப்பாந் தீனிப்பையில் புளிப்புச் சேரில்
விதவிதமாய் விக்கல்தான் விளைக்கும் பாரே. (49)

## வயிற்றுப் பொருமல்.

விளைகின்றவயிறு பொருமல் வருகும் நேர்மை
விள்ளுகிறேன் பெருங்குடலில் வாய்வு சேர்ந்து
முளைக்கின்ற வாய்வதுதான் எழும்பியப்போ
முக்கியமாய் வயிற்று நோயிரைச்சல் கண்டு



வளைக்கின்ற வயிறதுதான் விம்மி மெத்த
வருத்தமாய்க் காணுமப் போதப்பா நேர்ந்து
நுளைந்திருக்கும் வலுமை கெட்டு எழியதாகி
நேராக இதுகுணங்கள் காணும் பாரே (50)

காணுதற்குக் காரணங்கள் சொல்லக் கேளாய்
கதிப்பானப் போசனத்தை யருந்த லாலும்
ஊணுதற்கே உபயோக மற்றுப் போன
ஊன் கறிகள் மிகவுமதைக் கொள்ளலாலும்
பேணுதற்குச் செய்துவரும் பதார்த்தந் தன்னைப்
பெலமாக மென்றுமதைப் புசிக்காதாலும்
கோணிவிடு மதுபான மருந்த லாலும்
கொடுவிசா ரங் கொண்டு துயரடை வாரன்றே. (51)

அடைவுடனே புகைச்சுருட்டும் பொடி புகையிலையும்
அதிகமாய்க் கொள்ளுதலா லப்பா கேளே
மடையன் போல் சோம்பலாய் இருந்தாலும்
மானிலத்தி லதிகமா யுழைத்த லாலும்
கடினமாய் வாசிப்பில் வியாபித்த லாலும்
கனமான மனவூக்கங் கொள்ள லாலும்
கெடியாக இந்நோய்கள் அணுகு மென்று
கேட்டோர்கள் தனக்கு மெத்த உறுதிசொல்லே. (52)

உறுதியாய்த் தீர்வதற்கு மருந்து கேளு
உத்தமனே கரியுப்புச் செவப்புச் செய்து
பருதியாய்ப் பஞ்சாக்கினிச் சூரணத்தில்
பக்குவமாய்த் தானீந்தால் வாங்கு மய்யா
குருதியாய்க் குன்மத்தின் குடோரி செய்து
குறிப்புடனே ஐந்து நாளீந்தா யானால்
அருதியாய்ப் போகுமடா அட்ட குன்மம்
அனரியே ஓடுமெய்ப்புவியிற் பாரே. (53)

(தொடரும்)

# வைத்தியப் பகுதி.

## வாந்திபேதி.

(163-ம் பக்கத்தொடர்ச்சி)

### சிகிச்சைக்கிரமம்.

ஆரம்பத்தில் காணுகிற பேதியை உடனே நிறுத்த வேண்டியது. மருந்துகொடுத்தும் வாந்தியும் பேதியும் நிற்காவிட்டால் வைத்தியர் திகிலடைகின்றனர். திடீரென்று வயிற்றில் போவதை நிறுத்தக்கூடாது. வாந்திபேதிக்கென்று தயாரிக்கப்பட்ட சிறந்த மருந்துகளையே உபயோகிக்கவேண்டும். அது வேறு வைத்தியருடையது என்பதைச் சிந்தியாது தம்மிடம் ஒப்புவிக்கப்பட்ட பிணியாளன் குணமடையவேண்டுமென்ற நோக்கத்தோடு சிகிச்சைசெய்ய வேண்டும்.

கைகால் இசிவுக்கு கற்பூரமும், கொள்ளும் சேர்த்துத் தேய்க்கவேண்டும். வயிற்றுக்குக் கடுகு அரைத்துப் பத்துப் போடவேண்டும் உப்பு கொஞ்சம் அதிகமாய்ச் சேர்ப்பது நலம். நோயாளியைக் கம்பளிபோட்டுப் போர்த்திவைக்க வேண்டும். வாந்திபேதி வந்தவனுடைய வாந்தியின்மேலும் மலத்தின்மேலும் கிருமி ஹாரி மருந்துகளை ஊற்றி அவைகளை அப்புறப்படுத்தவேண்டும். நிலத்தை ஆழமாக வெட்டி அதில் அவைகளைப்புதைப்பதும், நெருப்பிலிட்டு எரிப்பதும் சாலச்சிறந்தது. குடிக்கிற நீரைக்காய்ச்சி வடிகட்டிக் கொள்ளவேண்டியது. இவ்வாறு செய்தாலக்கிருமிகளால் நேரிடக்கூடிய அபாயங்களினின்றும் தப்பலாம். வேலை அதிகமாய்ச் செய்யலாகாது. அக்காலங்களில் பேதிக்குசாப்பிடக்கூடாது.

அஜீரணம், மந்தம், எண்ணெய்ப் பலகாரம் சாப்பிட்டதால் உண்டானதென்று அலக்ஷியமாய் இராமல், வாந்தியோ பேதியோ காணும் ஆரம்பத்திலேயே கொஞ்சமும் தாமதியாமல் தக்க வைத்தியரை அணுகி சிகிச்சை பெற்றுக்கொள்ளவேண்டும். அல்லது காலரா மருந்து வாங்கி வைத்துக் கொள்ளவேண்டும். ஊரில் வாந்திபேதி இருக்கும்போது தெருவோரங்களில் விற்கும்பலகாரங்களையும், பழங்களையும் சாப்பிடக்கூடாது. எப்போதும் சூடான பதார்த்தங்களையே உட்கொள்ளவேண்டும். வீட்டிலும் அருகாமையிலும்சாணம், எரு முதலிய அசுத்தங்களைச் சேர்த்து வைக்காமல் அப்போதைக்கப்போது அப்புறப்படுத்தவேண்டும். உணவையும் தின்பண்டங்களையும் மூடி வைத்துக்கொள்ளவேண்டும்.



### மருந்து.

எலுமிச்சம்பழச்சாறு, தேன், இஞ்சிச்சாறு சமனெடை கலந்து புட்டியில் வைத்துக்கொண்டு பேதி வாந்தி நிற்கும் வரை வேளைக்கு ஒரு அவுன்ஸ் வீதம் கொடுக்கவும். ஒரு தடவை பேதியானால் ஒரு தரம் மருந்தைக் கொடுக்கவும்.

இளவறுப்புச்செய்த மிளகு கருக வறுத்த மிளகாய், இளவறுப்புச்செய்த ஓமம், நாட்டுச்சூடம் இவைகளை வகைக்கு ரூபாயெடை ஒன்று வீதம் எடுத்து, தேன் விட்டு அரைத்து சுண்டக்காய் அளவு கொடுக்கவும். மறுபடியும் பேதியானால் மறுபடியும் மருந்தைக் கொடுக்கவும். பேதியாகும் ஒவ்வொரு தடவையும் தடவைக்கொருதரம் மருந்து கொடுக்கவும்.

சூடப்பதங்கம், சாம்பிராணி, வசம்பு, சுட்ட கரி, பொரித்த காயம் வகைக்கு ரூபாயெடை ஒன்று, லிங்கம் ரூபாயெடை-½ இவைகளைத் தேன் விட்டரைத்து வேளைக்கு கடலைப்பிரமாணம் கொடுக்கவும்.

இவைகளை வியாதியின் ஆரம்பத்திலேயே உபயோகிப்பது நலம். வியாதி மீறியதாயின் சி. எம். சாமி காலரா மாத்திரை, கபாட லேகியம் கொடுக்கலாம். சூடுண்டாக கர்ப்பூரத்தை தேகமெங்கும் பூசி கடுகு, வெள்ளப்பூடு, சூடம், முருங்கைப்பட்டை இவைகளைச் சாராயத்தில் அரைத்து கை, பாதம், பிடரி, மடிப்புள்ள இடங்களில் தடவி கம்பளியால் போற்றவும்.

## ஜன்னிக்கு.

கஸ்தூரி மாத்திரை, ஜன்னித்தைலம் கொடுக்கலாம். வெளிப்பிரயோகமாக ஷை தைலத்தை தேய்க்கலாம்.

## நீர் பிரிய வெளிப்பிரயோகம்.

ஊமத்தன் விதை, வெள்ளரி விதை, எலிப்புழுக்கை, வெங்காரம் இவைகளில் எதாவதொன்றை அரைத்து வெண்ணெயில் சேர்த்து அடிவயிற்றில் தடவவும். மான் கொம்பை தாய்ப்பாலில் விட்டு உரைத்து தொப்புளில் தடவவும்.

## தாகத்துக்கு.

வியாதியஸ்தருக்கு தாகமுண்டானால் வேண்டியமட்டும் தண்ணீர் கொடுக்கவேண்டும். உடலிலுள்ள நீர் வாய் வழியாகவும் வயிற்றின் வழியாகவும் போய்விடுகிறபடியால் சதையானது இறுகி கெண்டைப்பிடிப்பு, கண் குழி விழல் முதலியவை உண்டாகிறது. ஆதலால் சுத்தமுள்ள குளிர்ந்த தண்ணீரையே அடிக்கடி கொடுக்கவேண்டும். அரிசியைப் பொரித்துக் கஞ்சிவைத்து அதோடு கொஞ்சம் உப்பும், சுக்குப்பவுடரும் சேர்த்துக் கொடுக்கலாம். பார்லிக்கஞ்சி, சோடா இவைகளையும் கொடுக்கலாம்.

## வயிற்று வலிக்கு.

வெடியுப்புச் சுன்னம் தாய்ப்பாலில் கொடுக்கவும். வெற்றிலைக்காம்பு, ஓமம், உப்பு சம எடை எடுத்து வெந்நீர் விட்டரைத்து வயிற்றில் தடவவும்.

## விருவிருப்புக்கு.

வெந்தயத்தை வறுத்து ஒற்றணம் கொடுக்கவும். யூக்லிப்டஸ் ஆயில் அல்லது சி. பி. சாமி சித்த ரசம் மேல் பூச்சாக உபயோகிக்கலாம்.

## வாந்திக்கு.

கிராம்புக் கஷாயம் கொடுக்கலாம். அன்னபேதி, வெடியுப்பு சரியெடை எடுத்து வறுத்து, தூள் செய்து தேனில் கொடுக்கலாம்.

## கெண்டை பிடித்தலுக்கு.

முருங்கைப் பட்டையை அரைத்து பெருவிரலில் கட்டவும்.



# மருந்து செய் பகுதி.

## அமிர்த கஷாயம்.

| | | |
|---|---|---|
| மேல்தோல் நீக்கிய சீந்தில் | ரூபாயெடை | 2. |
| கொட்டை நீக்கிய கடுக்காய் | ஷை | 2. |
| சுக்கு .... | ஷை | 2. |

இவைகளைச் சட்டியில் போட்டு $\frac{1}{2}$-படி தண்ணீர் விட்டு $\frac{1}{8}$-படியாக வற்றவைத்து வடிகட்டி சாப்பிடவும்.

அளவு:- வேளைக்கு வீசம்படியாக நாள் ஒன்றுக்கு 2-வேளை வீதம் காலை மாலை 3-நாட்கள் சாப்பிடவும்.

உபயோகம்:- சகல சுரங்களும் நீங்கும், உஷ்ணம் தணியும்.

## பதங்கம்.

கந்தகம், வெள்ளைப்பாஷாணம், பழிக்காரம், தூரிசு, அரிதாரம், வீரம், மனோசிலை, சவுரி, லிங்கம், காந்தம் இவைகளை வகைக்கு ரூபா யெடை $\frac{1}{4}$-எடுத்து, கோழி முட்டையின் வெள்ளைக்கரு சேர்த்து அரைத்து குகையும் மூடியும் செய்து ஷை குகையில் வாலரசம் ரூபாயெடை மூன்று விட்டு மூடி, மூடியில் 5-சிறு துவாரங்கள் செய்து சட்டியில் $\frac{1}{2}$-படி உப்புப்போட்டு அதன்மேல் ஷை குகையைவைத்து மேல் சட்டி மூடி, சீலைமண் செய்து அடுப்பிலேற்றி 12-மணி நேரம் எரிக்கவும். பின்பு மேல் சட்டியில் ஒட்டிக்கொண்டிருக்கும் பதங்கத்தைஎடுத்து புட்டியில் வைத்துக்கொள்ளவும்

அளவு:- வேளைக்கு ஒரு அரிசியெடை காலை மாலையாக நாள் ஒன்றுக்கு 2-வேளை வீதம் கொடுக்கவும். இவ்விதம் 7-வேளை மட்டும் கொடுக்கவும்.

அநுபானம்:- விளக்கெண்ணெய் வேளைக்கு $\frac{1}{2}$-ரூபாயெடை.

உபயோகம்: மேகவாதசூலை, கைகால்முடக்கு, அண்டவாய்வு, சூதகவாய்வு முதலியன குணமாகும்.

பத்தியம்:- கடுகு, நல்லெண்ணெய், புளி, புகையிலை நீக்கவும். உப்பை வறுத்து சேர்த்துக்கொள்ளவும். பால் கஞ்சி சேர்த்துக்கொள்தல் நலம். மருந்து $3\frac{1}{2}$-நாட்கள் சாப்பிட்டு மறுபத்தியம் $3\frac{1}{2}$-நாட்கள் அனுசரித்து பின்பு ஓமம் அரைத்து ஸ்நானம் செய்து அடுத்தநாள் நெய் ஸ்நானம் செய்துகொள்ளவும்.

# மூலிகைப் பகுதி.

## மஞ்சள்.

உடலைப் பொற்சாயலாக்கி புலால் நாற்றத்தைத் நீக்குகின்றது. பசி உண்டாகும். தலைவலி, ஜலதோஷம், பிரமேகம், நாசிகா ரோகம், ஐவகை வலி, வீக்கம், வண்டுகடி விஷம், பெருவிரணம் இவை போம்.

பொன்னிறமாம்மேனி புலானாற்ற மும்போகும்
மன்னுபுருஷன் வசியமாம்-பின்னிபெழும்
வாந்திபித்ததோஷமையம் வாதம்போந்தீபனமாங்
கூர்ந்தநறுமஞ்சட் டனக்கு.

தலைவலிநீ ற்றஞ் சளையாதமேக
முளைவுதருபீநசத்தி னாடே விஷசுரப்பு
விஞ்சுகடி விஷமும் வீறுவிரணங்களும்போ
மஞ்சட்கிழங்குக்கு மால்.

(பதார்த்தகுண சிந்தாமணி)

மஞ்சளும் சூரணமும் சுண்ணாம்பும் சேர்ந்து சுளுக்கு, அடிபட்ட புண்கள், ரணங்கள் முதலியவைகளுக்குத் தடவலாம்.

மஞ்சள் பவுடர் கலந்த தண்ணீரை வடிகட்டி கண்களை கழுவிவருவதால் கண்ணோய் சாந்தமாகும். ஒரு மெல்லிய துணியை அத்தண்ணீரில் நனைத்து நிழலில் உலர்த்தி கண்களைத் துடைத்துவருவதால் கண் வலி குணமாகும்.

மஞ்சளைத்தட்டி கஷாயமிட்டு நசியமாக உபயோகப் படுத்தினால் பீநிசநோய் குணமாகும்.

மஞ்சள் சூரணத்தை நெய்யில் குழைத்து காலைமாலையாக சாப்பிட்டுவந்தால் இருமல் நீங்கும்.

மஞ்சள் சூரணமும் மிளகுப்பொடியும் பாலில்சேர்த்து உட்கொள்ள ஜலதோஷம் தொண்டைக்கம்மல் நீங்கும்.

மஞ்சள் குளிப்பதால் ஐயம், துர்க்கந்தம், முகவருத்தம், வியர்வை

184919



# நாடகப்பகுதி.

## நாகானந்தன்.

(லேட் H. ராமசாமி அய்யர் அவர்களால் எழுதப்பட்டது)

(167-ம் பக்கத் தொடர்ச்சி.)

அங்கம் 2] [களம் 2.

**நாகானந்தன்:—** பாண்டியர் ஏறே! சோணாட்டுக்குடிகளோ அம்மன்னன் கொடுமை தாங்கொணாதிங்குற்றனர். அவர்தமை அக்கொடுங்கோலன்பால் விடுத்தல் அவர்களை அவன் கொலைசெய்தற்பொருட்டேயாம். அப்பழியும் பாவமும் நம்மிறைவனைச்சூழும். மன்னர் நீதியோ தம் நாட்டினைச்செம்மையே புரத்தல் மாத்திரமன்று. கோல் கோடி குடிகளை வாட்டும் பிற மன்னருக்கும் புத்தி வருவித்தலேயாம். இச்சோழனோ கோல் கோடிய மன்னன். அதுபற்றி முன்னமே அவன் அறந்திரும்பிபவழி நடந்ததின்பொருட்டு வாட்டுதலுற்றிழுத்தல் வேண்டும். இது சமயம் அக்கொடுங்கோலன் நம் பலமுணராது தர்ம விருத்தமாய் போர் கூவி அறைகின்றனன். அவனுடன் சந்திபேசி அவன் பிரஜைகளை மீண்டும் மறுப்பின் நம்மை வலியிலதெனக்கொண்டு வேறு காரணங்காட்டி போருக்கழைப்பன். ‘சிறிய பகையெனினும் ஓம்புதல் தேற்றார் பெரிதும் பிழைபாடுடையர்’ என்பது நீதிவாக்கியம். அதுபற்றி அவனுடன் பொருதலே தகுதியாகும். ஆயின் ஒன்றுளது. பிரபு ஜயதுங்கர் கூறியவாறு அவனை நம் நாடு புகுவதற்கு இடந்தரின் நம் நாடு வறுமையுறுமென்பதிற் றடையில்லை. விவசாயம், வாணிபம், கைத்தொழிலாதிகள் கெடும். பொக்கிஷம் குறையும். அதுபற்றி நம் சேனையை எதிராளியின் நாட்டிற் போக்கிப் பொருது வெற்றியுற்று நஷ்ட ஈடு வாங்கி பொக்கிஷத்தை நிறைத்தல் வேண்டும்.

**ஜயதுங்கன்:—** சேனாதிபதியாரே! இரு கக்ஷிகளுள் ஏற்படுவது போர். ஜெயாபஜெயமோ எடுத்தோதற்கெளிதன்று. நாமெவ்வாறு வெற்றியில் விருப்புளமோ அவ்வாறே எதிலரும் விருப்புடன் கூடியிருப்பர். ஒருக்கால் தவறி நாம் அபஜெயமுறின் நமக்கு ஏற்பட இருக்கும் நஷ்டம் கருதும். யுத்தத்தின் பொருட்டு பொருளை வாரி இறைப்பதுடன் பின்னரும் நஷ்டஈடும் கொடுக்கவேண்டுமல்லவா? பொருட் குறைவால் குடிகளுக்கு செய்வன திருந்தச்செய்ய முடியாது. அதுபற்றி இறைவனுக்கும் குடிகளுக்கும் இன்றியமையா ஒற்றுமை குன்றித் தேசமின்னலுழுமன்றோ?

**நாகானந்தன்:—** பிரபோ! நமது நாட்டின் சேனாபலத்தையும், சத்துருவின் சேனாபலத்தையும் ஒப்பிடுங்கால் நமது மிக்கப்பெருகியது. மிக்க ஒற்றுமையுடையது. நன்கு நூதன முறையில் பயிற்சி பெற்றது. தம் தேசத்தின் பொருட்டுத் தம்மை எக்கியம் செய்யும் துணிவினை தம்மனத்துள் கொண்டது. சோழன் சேனையோ அளவில் குன்றியது. கொடுங்கோன்மையால் ஒற்றுமையிலது. அநேக காரணமாய் போரில் நன்கு பயிற்சிபெறாதது. மன்னன் அழிவினையே நாடுவது. சோணாட்டில் உட்கலகமும் போர் வீரருள் உட்கலகமும் நிறைந்துளது. இடையின்றி ஒழுங்கிலா ஆட்சியால் பொக்கிஷம் வரண்டுளது. காவிரியால் வளமும், வளத்தாற் செல்வமும் பெருக்கெடுத்துளதென இறுமாந்து சோழன் நம்மைப் போருக்கழைக்கின்றனன். அவனில் நாம் வலிகுன்றியவரல்லர் என்பதனை நிலைநாட்ட இதுவன்றோ ஏற்ற சமயம். ஆதலின் புனராலோசனை செய்து பின்னும் தங்கள் அபிப்ராயந்தருவீராக.

**ஜயதுங்கன்:—** சேனாதிபதியாரே! நமக்குள்ள அநுகூலங்களையும், சத்துருக்குள அவகுணங்களையும் செவ்வனே கூறியதால் நாம் அபஜெயமுறுவோமா எனும் அச்சம் அகன்றது. அடைக்கலங் காத்தற்பொருட்டுச் சோழனுக்குப்போர் தருதல் வேண்டுமென்பதே என் கருத்து.



**ஜயசீலன்:—** மன்னர் மன்னா! நாகானந்தர் விஷயத்தைத் தெள்ளென விளக்கியதால் யானும் போருக்கிணங்குகின்றேன்.

**ஜயவீரன்:—** வேந்தர்பிரானே! நமக்குள சாதகங்கள் விளக்கலாயின. வெற்றியே நமக்கெய்தும் என்பதறிந்தேன். ஆதலின் பொருதலே நலமென்பதே எனது கோட்பாடும்.

**சுகுணன்:—** அங்கத்தினர்காள்! யுத்தத்தினால் நமக்கேற்படும் சாதகபாதகங்கள் நன்கே வாதிக்கலாயின. நமக்கு வெற்றியுண்டாமென்பதும் விளக்கலாயிற்று. நீங்கள் பலரும் ஒருமுகமாய்ப் பொருதல் அவசியம் எனத் தீர்மானித்துளீர். யானும் உங்கள் கருத்திற்கிணங்கி போர் தருவது என முடிவு செய்துளேன்.

**சுந்திரகுமாரன்:—** வேந்தே! என்னை உபசேனாதிபதியாக சோணாடுசெல்ல அநுமதி அளிக்கவேண்டுகிறேன்.

**சுகுணன்:—** குழந்தாய்! நீயோ வயதுவந்த க்ஷத்ரியன். க்ஷத்திரிய தர்மமோ போர் ஏற்பட்ட சமயம் தேகமோகம் அகற்றிப் பொருதலேயாகும். ஆதலின் நம்மால் யாதும் ஆக்ஷேபணையில்லை. நீ சோணாடு செல்லுங்கால் இவனையும் உபசேனாதிபதியாய் அழைத்தேகுக. (யாவரும் மறைதல்)

(தொடரும்.)

"சுசீலா"

சுகந்த வாசனைத் தைலம்.

நூதனமுறைப்படி தயாரிக்கப்பட்டது. இது கூந்தலை கருமையாக வளரச்செய்யும். ரோமம் உதிர்தல், தலையில் உண்டாகும் பொடுகு முதலியவைகளை நீக்கும்.

புட்டி 1-க்கு விலை அணா 10.

கிடைக்குமிடம்:- உடுமலை K.S. ராமநாத அய்யர், ஷண்முகானந்த பவன் ஹோட்டல், பழனி.

பீம விலாஸ், அடிவாரம், பழனி.

# மதிப்புரைகள்.

## லேகியத் தொண்டன்.

இதன் பிரதி மலர் 1, இதழ் 5 வரப்பெற்றோம். இது ஜனாப் ஹக்கீம் அப்துல்லா சாகிப் அவர்களை ஆசிரியராகக் கொண்டு சென்னையிலிருந்து வெளிவரும் மாத வெளியீடு. இது சுமார் 80 பக்கங்கள் கொண்டது. தமிழர்கட்கும், முஸ்லீம்களுக்கும் பயன்படும் அரிய கட்டுரைகள் இதில் அடங்கியிருக்கின்றன. பெரியார் பொன் மொழிகள், தேசீய விஷயங்கள், உலக விநோதங்கள், உள்ளூர், வெளியூர் விஷயங்கள் முதலியன பிரசுரிக்கப் பட்டிருக்கின்றன.

வருட சந்தா சென்னைக்கு ரூ. 1. வெளியூருக்கு ரூ. 1-4-0.

தனிப்பிரதி 0—1—3.

லேகியத் தொண்டன், 119, பிராட்வே, மதராஸ்.

## செங்குந்த மித்திரன்.

இதன் வால்யம் 9, பிரதி 5. வரப்பெற்றோம். இது தென்னிந்திய செங்குந்த மகா சங்கத்தினின்றும் திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியார் அவர்களை ஆசிரியராகக் கொண்டு செங்குந்தர் முன்னேற்றங்கருதி சென்னையிலிருந்து வெளியாகிறது. ரேப்பரில் ஐந்தாம் ஜார்ஜ் சக்ரவர்த்தி அவர்கள் படமும், உட்பக்கத்தில் திரு. V. S. செங்கோட்டையா முதலியார் அவர்கள் படமும், ஆல்பர்ட் இளவரசர், ஜார்ஜ் இளவரசர் படங்களும் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. இதில் பல அரிய கட்டுரைகளுங் காணப்படுகின்றன.

வருட சந்தா உள் நாடு ரூ. 1-8-0. வெளி நாடு ரூ. 2-0-0.

செங்குந்த மித்திரன் ஆபீஸ்,
பவழக்கார தெரு, மதராஸ்.

# அது என்ன புத்தகம்?

**கமலம்:**— அப்பா! நீங்கள் வைத்திருப்பது என்ன புத்தகம்?

**தந்தை:**— இது ஒரு புத்தகமல்ல. பத்திரிகை.

**கமலம்:**— என்ன பத்திரிகை?

**தந்தை:**— "சித்தன்"

**கமலம்:**— எங்கே கொடுங்கள்.

**தந்தை:**— இப்பொழுதுதான் நான் வாங்கி வந்தேன். 4, 5பக்கங்கள்தான் பார்த்திருக்கிறேன். இன்னும் பாக்கியைப்பார்த்துவிட்டு அரை மணி நேரத்தில் தருகிறேன்.

**கமலம்:**— அப்பா! இதில் என்ன விஷயங்கள் இருக்கின்றன.

**தந்தை:**— பத்திரிகை என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும். இது ஒரு மாதப் பத்திரிகை. அறிவு வளர்ச்சிக்கான விஷயங்களும், பெரியார் சரிதங்களும், ஆரோக்கியாம்சங்களும், இலகுவில் மருந்து செய்முறைகளும், வியாதிவரின் உடனுக்குடன் செய்யவேண்டிய சிகிச்சைக் கிரமங்களும் வெகு தெளிவாய்க் கூறப்பட்டிருக்கிறது.

**கமலம்:**— பெண்மக்களுக்கேதாவது விஷயமுளதோ?

**தந்தை:**— ஆம். மாதர் பகுதி எனத்தனியாக பெண்கள் முன்னேற்றத்திற்கும், அறிவு விருத்திக்கும் ஏதுவான விஷயங்களும் கூறப்படுகின்றன.

**கமலம்:**— அப்படியானால் நான் படிக்கவேண்டியதுதான்.

**தந்தை:**— புண்ணிய ஸ்தலங்களில் ஒன்றாகிய பழனி ஸ்தலத்தின் பெருமையை கோவை. திரு. சி. கு. நாராணசாமி முதலியார் எழுதிவருவதைக் கவனித்தால் பழனிக்குப்போயறியாத ஒருவனும் இலகுவில் பிரயாணம் செய்யும் விதத்தையும், அங்குபார்க்கவேண்டிய விநோதங்கள் இன்னவை என்பதையும் குறிப்பாய் அறிந்துகொள்ளலாம்.

**கமலம்:**— அது என்ன விலை?

**தந்தை:**—வருஷம் ஒன்றுக்கு சந்தா அணா எட்டேதான்.

**கமலம்:**— அப்படியானால் என்னையும் ஒரு சந்தாதாராகசேர்த்துக்கொள்ளும்படி செய்யுங்கள். இந்தா அணா 8.

## ஸ்ரீ ஷண்முகானந்த பவான் ஹோட்டல், பழனி.

அன்புமிக்க ஐயா,

பொது ஜனங்களின் செளகரியத்தை முன்னிட்டு பழனி ரெயில்வே பீடர் ரோட்டில் (ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து சுவாமி மலைக்குப்போகும் ரோடு) ஜெயராம் தியேட்டருக்கு அருகில் கட்டப்பட்ட 'புதிய கட்டிடத்தில்' நிகழும் யுவ-௵ வைகாசி மாதம் முதல் ௸ ஹோட்டல் நடத்தப்படும். ஆதலால் கனவான்கள் அனைவரும் விஜயஞ்செய்ய வேணுமாய்க்கோருகிறேன்.

**உடுமலை K. S. ராமனாத அய்யர்**

---

## சுகத்தைக் கண்டுபிடியுங்கள்.

காப்பிக்குடியை ஒழிக்கும் ரேப்பிப்பொடி சாப்பிட்டுத் திட சரீரம் பெற்றுச் சுகத்தைக் கண்டுபிடியுங்கள்.

**V. P.** யுள்பட டின் 1-க்கு ரூ. 1.
வெளிநாடு ,, ரூ. 2.

**S. V.** ராஜப்பா,
ரேப்பி பாக்டரி, பழனி.

---

சூதக வயிற்று வலியா?

## கர்ப்ப எண்ணெய்

உபயோகியுங்கள்.



**இது பழனி மலையப்பசாமி வைத்தியசாலையில் தயாரிக்கப்பட்டது.**

இது மாதர்களுக்கென்றே கடவுளால் அருளப்பட்ட ஓர் சஞ்சீவி. மாதாந்தரகாலத்திலுண்டாகும் வயிற்றுவலியை உடனே நிறுத்தும். சூதகக்கட்டு, சூதக சூலை, காப்பந்தரியாதிருத்தல், சூதககாலத்தில் இரத்தம் சிறிது கண்டு மறைதல், சூதகம் நின்று சரீரம் ஸ்தூலித்தல், ஆயாசம், தலைவலி, உடம்பு கைகால் வலி, குடைச்சல், தலைபாரம், மயக்கம், வாந்தி, விக்கல், தூக்கமின்மை, இடுப்பு நோய் மலபந்தம், சூதக வாய்வு, முதுகு வலி முதலியவைகளை நீக்கி, சரீர பலத்தையும், புத்திர சந்தானத்தையும் கொடுக்கும். அனுபவத்தில் கைகண்டது.

புட்டி 1-க்கு விலை ரூ. 2—0—0.

குறிப்பு.— இதைத்தவிர பழனி மலையப்பசாமி வைத்தியசாலையின் சகல மருந்துகளும் எம்மிடம் கிடைக்கும்.

**கியாட்லாக் இனாம்.**

ஏஜண்டு:—

நீ. ஒ. ஆ.
**முகமது இபுருகிம் & பிரதர்ஸ்,**
இந்தியா மருந்து வியாபாரிகள்,
193-காலாங்ரோடு, சிங்கப்பூர்.

# பூபதி செந்தூரம்.

இதை உட்கொண்டால் ஜுரம், ஜன்னி, வாந்திபேதி வயிற்றுப்போக்கு, மகமாரி (பிளேக்) பித்தம், கிறுகிறுப்பு, சூலை, குன்மம், சுவாசகாசம், க்ஷயம், வாதம், உடல் வலி, பொருமல், அண்ட வாய்வு, சூதக வாய்வு, பக்கவாதம் முதலிய நோய்கள் தீருவதோடு பிள்ளைபெற்ற பெண்களுக்குண்டாகும் எல்லா நோய்களும், குழந்தைகளுக்கு உண்டாகும் மாந்தங்கள், தோஷங்கள், ஜுரம், ஜன்னி, இருமல் முதலிய சகல நோய்களும் குணமாகும்.

தோலா 1-க்கு விலை ரூ 4—0—0.
தோலா ¼-க்கு விலை ரூ. 1—0—0.
(தபால் சார்ஜ் வேறு)

**சாமி, விருதை, சிவஞான யோகிகள்**
சிவஞான சித்த பார்மஸி, கோவிற்பட்டி.

---

தமிழ் பிரமசூத்திர ஆசிரியர்,
சாமி, விருதை, சிவஞான யோகிகளால்
வெளியிடப்பட்ட புத்தகங்கள்.

| | | |
|---|---|---|
| 1. | தேவோபாச னதீபம் (விக்கிரகாராதன விளக்கம்) | 0— 8—0 |
| 2. | விபூதி ருத்திராக்ஷதாரண நிரூபணம் | 0—14—0 |
| 3. | வேதாகம உண்மை | 0— 1—0 |
| 4. | சிவஞானபோத வினாவிடை | 0— 8—0 |
| 5. | கோவிற்புரி புராணம் | 1— 0—0 |

கிடைக்குமிடம்:—

**சாமி, விருதை, சிவஞானயோகிகள்**
**கோவிற்பட்டி.**

# ஆரோக்கிய லேகியம்.

இதைச்சாப்பிட்டுவந்தால் பலஹீனம், அஜீரணம், தேக மெலிவு, வெட்டை, உஷ்ணகாங்கை, மூலச்சூடு, மேகவியாதிகள், பித்த அரோசிகம், வய்வு, புளித்தேப்பம், இடுப்பு வலி, காமாலை, மலக்கட்டு முதலியன நீங்கி நல்ல பசியைக் கொடுத்து. இரத்தவிர்த்தி, தேகக்கட்டு. தாதுபுஷ்டி இவைகளைத்தரும். பத்தியமில்லை. சாப்பிட வெகு ருசியாயும் மணமாயுமிருக்கும். அன்றாடகம் சரியாய் மலப்பிரவர்த்தி செய்வதில் முதன்மையானது. நீண்டகாலமநுபவமானது. கர்ப்பிணிகளும் இதைச் சாப்பிட்டுவருவதால் நல்ல திடகாத்திரம் அடைவார்கள்.

சேர் 1-க்கு விலை ரூ. 1—0—0.

---

# அமிர்த சஞ்சீவி லேகியம்.

இப்பெருமுறை லேகியம் மகா அருமையானது. சாப்பிடுவதற்கு ருசியாயும், மணமாயும் இருக்கும். இதில் சீந்திச்சர்க்கரை, வில்வப்பூ, கஸ்தூரி, குங்குமப்பூ, பச்சைக் கற்பூரம், கோரோஜனை, வல்லாரை, மேத்தான் வித்து முதலிய அரிய சரக்குகள் சேர்க்கப்பட்டிருக்கிறது. இது சகல வியாதிகளையும் நீக்கும். சகல பஸ்ப செந்தூரத்தையும் இதில் வைத்துச்சாப்பிட குணம் தரும்.

இது வெள்ளை, வெட்டை, ரத்தமேகம், மூலரோகம், நீரிழிவு, மேக உஷ்ணம், அஜீரணம், மேகநீர்க்கூட்டங்கள், தீராத கிராணி, அதிசாரம், பலஹீனம் இருமல் முதலியவற்றை நிவர்த்திக்கும். தாதுபுஷ்டியும் உண்டாக்கும்.

சேர் 1க்கு விலை ரூ. 5—0—0.

**மலையப்பசாமி வைத்தியசாலை,**
**பழனி. *S. I.***

# சந்தனாதித் தைலம்.

எமது முன்னோர்கள் அனுபவ முறைப்படி
தயார்செய்யப்பட்டது.

இதை தலைமுழுகிவந்தால் கண்களுக்கும் மூளைக்கும் குளிர்ச்சியைக்கொடுத்து, தலை நரம்புகளுக்கு பலத்தைக் கொடுக்கும். மூளைக்கொதிப்பு, கண் புகைச்சல், கண்ணில் நீர் வடிதல், கபால வரட்சி, பீநிசம், சோகை, நீர்த்தாரை காந்தல், மண்டைக்குத்து இவைகள் நீங்கும். சகலவித மேகரோகங்களும் நீங்கும். சிரசில் பதமிட்டுவந்தால் தூக்கமின்மையும் நீங்கி மயிர் கருத்து வளரும். இரத்தத்தை சுத்திகரிக்கும். ஆண் பெண் இருபாலரும், குழந்தைகளும் இத்தைலத்தை தேய்த்து முழுகலாம்.

16-அவுன்ஸ் புட்டி 1-க்கு விலை ரூ. 4—0—0.

# பிருங்காமலக தைலம்.

ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்டது.

இத்தைலத்தில் சேர்க்கப்பட்ட மூலிகைச் சரக்குகள் மிகவும் அருமையானவையாதலால் இதை ஸ்நானத்திற்கு உபயோகித்தவர்கள் வேறுதைலங்களை உபயோகிக்க விரும்பமாட்டார்கள் என்றே சொல்லலாம். இது உடலிலுள்ள உஷ்ணத்தைப் போக்கி, கண்களுக்கும் மூளைக்கும் குளிர்ச்சியைக்கொடுக்கும். பாலியத்திலுள்ள பித்தநரையை மாற்றும். மூளைக்கு வேலை கொடுக்கும் உத்தியோகஸ்தர்களுக்கு இத்தைலம் மிகச் சிறந்தது.

16-அவுன்ஸ் புட்டி 1க்கு விலை ரூ. 3—0—0.

**மலையப்பசாமி வைத்தியசாலை,**
**பழனி. S. I.**

குன்ம வயிற்றுவலிக்கு

# உப்புச் சுன்னம்.

இந்நோய் ஆரம்பத்தில் சில வேளைகளில் மாத்திரமுண்டாகி பின்பு நாளாவட்டத்தில் பொறுக்கமுடியாதபடி உபத்திரவத்தை உண்டுபண்ணக்கூடியது. இவ்வியாதியால் வருந்துபவர் உபத்திரவம் சகிக்கமாட்டாது உயிர் விடவும் துணிவர். ஐயோ! பரிதாபம்.

எமது உப்புச்சுன்னம் இதற்குக்கைகண்ட மருந்தென்பதை அனுபவசாலிகள் அறிவர். இது குன்ம வயிற்றுவலி, அஜீரணம், வாந்தி, குடலிரைச்சல், வயிற்றுப்பிசம், புளியேப்பம், வயிறுபெறுத்தல், மலபந்தம் முதலியவைகளைக் குணப்படுத்தும். பல மருந்துகளில் தீராதிருப்பினும் இம்மருந்தால் அவசியம் தீரும்.

24-வேளை சுன்னம் விலை ரூ. 3—0—0.

# சொர்ண அயக்காந்த செந்தூரம்.

இது வாய்வு, வயிற்றுவலி, பாண்டு, சோகை, வீக்கம், காமாலை, தேகம் வெளுத்திருத்தல், பித்த நோய்கள், தலைமயக்கம், கிறுகிறுப்பு, செரியாமை, கபநோய், அரோசிகம், அன்னத்துவேஷம், கிராணி, அதிசாரம் முதலிய ரோகங்களைப் போக்கும். நல்ல பசியைக்கொடுத்து, இரத்த சுத்தியும், தேகபுஷ்டியும் தரும். நரம்புகள் முறுக்கேறும்.

48-நாள் செந்தூரம் விலை ரூ. 7. 24-நாள் விலை ரூ. 4.

(அயச்செந்தூரம்.)

48-நாள் விலை ரூ. 5. 24-நாள் விலை ரூ. 3.

**மலையப்பசாமி வைத்தியசாலை,**
**பழனி. S. I.**

# மேகராஜாங்க எண்ணெய்.

இது மேகரோகங்களுக்கும், புண்புரைகளுக்கும், சூலை நீர், மேகப்பித்தங்களுக்கும் உயர்ந்த எண்ணெய். காலையில் மட்டும் 5-நாள் சாப்பிட சுகபேதியாகி வியாதியைக் கண்டிக்கும். மேகரோகங்கள், கிரந்தி, புண் புரைகள், சிரங்கு கரப்பான், நீர்கள், பத்துகள், சூலைநீர், பவுத்திரம், நாட்பட்ட வெட்டை, அரையாப்பு, தொடைவாழை, ஆறாத ரணங்கள், கண்டமாலை, கன்னப்புத்து முதலிய வியாதிகள் நீங்கும். இது எண்ணெய்ப்போக்கானதால் குழந்தைகள் முதல் யாவருக்கும் கொடுக்கலாம்.

புட்டி 1-க்கு விலை ரூ 3—0—0.

# சர்வரோக சஞ்சீவி எண்ணெய்.

இதைக் காலை மாலை பசும்பாலில் 3-முதல் 5-துளிகள் விட்டுச்சாப்பிட மேகரோகங்கள் சொரி, சிரங்கு, அரிப்பு, தடிப்பு, படை, ரணங்கள், மூலச்சூடு, மூலவாய்வு, கண், கைகால் எரிவு முதலியன நீங்கி, நல்ல இரத்த விருத்தியும், பலமும் உண்டாகும். இதை ரணங்களுக்கும் மேகப்புண், படை, சொரிசிரங்குகளுக்கும் மேற்பூச்சாகத் தடவலாம். பத்தியமில்லை.

பெரிய புட்டி 1-க்கு விலை ரூ. 2—0—0.
சிறியது விலை ரூ. 1—0—0.

சகல வியாதிகளுக்கும் மருந்துகள் கிடைக்கும்

**விபரமான கேட்லாக்கிற்கு எழுதவும்**

**மலையப்பசாமி வைத்தியசாலை,**
**பழனி. S.I.**